




# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

**தலைமைக் கழகம்**

எண்: 21/11, 1வது பிரதான சாலை, கற்பகம் தோட்டம், அடையாறு, சென்னை-600 020.
தொலைப்பேசி : 044 -2848 1235

டிடிவி தினகரன்
பொதுச்செயலாளர்


**"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"**

தேதி : 14.03.2025

## "எல்லார்க்கும் எல்லாம்" என்ற தலைப்பில் "எவருக்கும் எதுவுமில்லை" என்பதை உறுதிபடுத்தும் திமுக அரசின் நிதிநிலை அறிக்கை!

மாநிலத்தின் உற்பத்தி திறன், தொழில் வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் மக்கள் நலத்திட்டங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டிய நிதிநிலை அறிக்கை, திமுக அரசின் வீண் விளம்பரங்களும், நிறைவேற்ற முடியாத தேர்தல் வாக்குறுதிகளும் நிறைந்ததாக அமைந்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

**கடந்த கால நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களே தற்போது வரை பயன்பாட்டிற்கு வராத நிலையில், பொதுமக்கள் மத்தியில் எழுந்திருக்கும் கடும் அதிருப்தி மனநிலையை திசைதிருப்ப, அண்மைக் காலமாக தேவையற்ற பல பிரச்னைகளை தூண்டிய திமுக, அதன் தொடர்ச்சியாக நடப்பாண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலும் கவர்ச்சிகரமான அறிவிப்புகளை அறிவித்திருப்பதன் மூலம் இதுதான் அவர்கள் தாக்கல் செய்யும் கடைசி முழு பட்ஜெட் என்பதை உணர்ந்திருப்பதையே வெளிப்படுத்துகிறது.**

தமிழகத்தின் தலையாய பிரச்னையாக உருவெடுத்திருக்கும் கொலை, கொள்ளை, பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்களால் தமிழகத்தில் சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்குகளை சீரமைப்பது தொடர்பாகவோ, அதற்கு அடிப்படை காரணமாக திகழும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் தாராளப் புழக்கத்தை கட்டுப்படுத்துவது தொடர்பாகவோ எந்தவித தகவலும் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறாதது தமிழக மக்கள் மீதான திமுக அரசின் அக்கறையின்மையை காட்டுகிறது.

**ஒவ்வொரு ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் ஒதுக்கப்படும் நிதியின் அளவு அதிகரிக்கிறதே தவிர, அரசுப்பள்ளிகளின் தரமோ, அதில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கல்வித்திறனோ உயர்ந்ததாக தெரியவில்லை. அதைப் போலவே பெரும்பாலான அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக்குறை மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாடும் தொடர்கதையாகி வருவதன் மூலம் நிதிநிலை அறிக்கையில் ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் நிதி எங்கே செல்கிறது என்ற கேள்வி எழுகிறது.**

அரசுத்துறையில் உள்ள காலிப்பணியிடங்களில் கடந்த நான்கு ஆண்டுகளில் ஒரு லட்சம் பணியிடங்களை கூட நிரப்பாத திமுக அரசு, நடப்பாண்டில் மேலும் 40 ஆயிரம் பேர் மட்டுமே பணி நியமனம் செய்யப்படுவார்கள் என நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருப்பது அரசுப்பணி கனவில் இரவு பகலாக போட்டித் தேர்வுகளுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான தேர்வர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

**திமுக அரசின் மின்கட்டண உயர்வால் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் சுமார் 9 ஆயிரத்திற்கும் அதிகமான சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கும் நிலையில் தொழில் முடக்கத்தை தவிர்க்கவோ, அதனை நம்பியிருக்கும் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவோ எந்தவித ஆக்கப்பூர்வமான திட்டங்களும்**

**நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்படாதது சிறு குறு நடுத்தர தொழில்துறையினர் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை அளித்திருக்கிறது.**

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட புதியதாக 1000 பேருந்துகள் வாங்கப்படும் என்ற அறிவிப்பு முழுமையாக செயல்பாட்டிற்கு வராத நிலையில், நடப்பாண்டில் 1125 மின்பேருந்துகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என அறிவித்திருப்பது கேலிக்கூத்தாக உள்ளது.

**தமிழக அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் உயர்கல்வி சிறக்க இதயதெய்வம் அம்மா அவர்கள் அறிமுகப்படுத்திய விலையில்லா மடிக்கணினி திட்டத்தை நிதிச்சுமை காரணம் காட்டி நிறுத்தி வைத்த திமுக அரசு, தற்போது 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு கைக்கணினி அல்லது மடிக்கணினி வழங்கப்படும் என அறிவித்திருப்பது அப்பட்டமான அரசியல் காழ்ப்புணர்ச்சியை வெளிச்சம்போட்டு காட்டுகிறது.**

பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் அமல்படுத்தப்படும் என்ற திமுகவின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றக்கோரி அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் ஈட்டிய சரண் விடுப்பை மட்டும் வழங்குவதாக அறிவித்திருப்பதோடு, அதுவும் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் மட்டுமே என கூறியிருப்பது மீண்டும் அரசு ஊழியர்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளை மட்டுமே குறிவைத்து எடுத்திருக்கும் நடவடிக்கையாகவே பார்க்க முடிகிறது.

**மேலும், தமிழக அரசின் கடன்சுமை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்வது திமுக அரசின் செயலற்ற நிர்வாகத்தை வெளிப்படுத்துவதோடு, அதிக கடன்கள் வாங்கும் மாநிலங்களின் பட்டியலில் தொடர்ந்து முதலிடம் வகிக்க வேண்டும் என்பதை திமுக அரசு இலக்காக நிர்ணயித்திருக்கிறதோ? என்ற கேள்வியைதான் எழுப்பத் தோன்றுகிறது.**

ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது, சமூகநீதியின் முதல் படியான சாதிவாரி கணக்கெடுப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துதல், நதிநீர் இணைப்பு திட்டங்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தோடு இணைந்த மாநில உரிமை சார்ந்த நீராதார பிரச்னைகளுக்கு தீர்வு என எதுவுமே இல்லாமல் திமுக அரசால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கைக்கான தலைப்பை எல்லார்க்கும் எல்லாம் என்பதற்கு மாறாக எவருக்கும் எதுவுமில்லை என்று வைத்திருந்தால் பொருத்தமானதாக இருந்திருக்கும்.

டிடிவி தினகரன்